R 5778 (page 297)

# கிறிஸ்து பட்ட பாடுகளினாலே பூரணரானார்

## THE CHRIST PERFECTED BY SUFFERING

*“கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.” 1 பேதுரு 4 : 13*

தேவனுடைய பிள்ளைகளாகவும், நன்மையானதை செய்பவர்களாகவும் ஆனதின் பலனாக, விசேஷமான சோதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆரம்பத்தில் விநோதமாக தோன்றலாம். பாவம் செய்கிறவர்கள் துன்பப்படுவார்கள் என்பதும், பாவத்தை தவிர்க்க விரும்புகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதும் இயற்கையான எதிர்பார்ப்பாக இருக்கும். இது ஒரு இயற்கையான பிரமாணம், இது ஏற்ற காலத்தில், நமது கர்த்தரின் ஆயிர வருட ஆளுகையில் நடைமுறையில் இருக்கும். அங்கே தீமை செய்பவர்கள் துன்பப்படுவார்கள், தொடர்ந்து செய்வதாகக் காணப்பட்டால் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள். ஆனால் நன்மை செய்பவர்கள் நித்திய ஜீவன் மற்றும் நித்திய ஆசீர்வாதத்தின் மூலம் வெகுமானம் பெறுவார்கள்.

நீதியின் அதிபதி இன்னும் ஆளுகையை ஆரம்பிக்காததால் இது இன்னும் உண்மையாகவில்லை. நாம் இன்னும் அந்தகார அதிபதியின் ஆளுகையின் கீழ் இருக்கிறோம். நன்மை செய்பவர்கள் துன்பப்படும்போது, தீமை செய்பவர்கள் அடிக்கடி வெற்றி பெறுகிறார்கள். தாவீது கூறுகிறதாவது: “அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய் பார்க்கிறது; அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது.” (சங்கீதம் 73:7) எனினும் தேவனை சந்தோஷப்படுத்துகிறவர்களுடைய நிலையை அவர் எடுத்தார். அதேபோல் நாமும் செய்கிறோம்.

### நம்மை சோதிப்பதில் தேவனுடைய நோக்கம்

பரிசுத்த பவுல் சுவிசேஷ யுக சபையைப் பற்றி பேசும் போது அவர் சொல்கிறதாவது: “கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.” (2தீமோ 3:12) இந்த பிரமாணத்திற்கு விதிவிலக்கு யாருமில்லை. இதைப்பற்றிய அறிவும் எதிர்பார்க்குதலும் நீதி என்னும் மார்க்கவசத்தை தரித்துக் கொண்டும், சமாதானத்தின் சுவிசேஷத்துக்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையை தொடுத்துக் கொண்டும் நம்மை தரித்து நிற்கச் செய்கிறது.

தேவன், தமது பிள்ளைகள் இந்த அனுபவங்களைப் பெறவும், நன்மை செய்து பாடுபடவும் வேண்டும் என்று அனுமதிக்கிறார். தற்காலத்தில் அவர் ஒரு பரிசுத்த கூட்டத்தாரை அழைக்கிறார். இந்த கூட்டத்தார் மேசியாவின் ஆளுகையில் உலகமனைத்தையும் ஆசீர்வதிக்கக் கூடிய ராஜரீக ஆசாரியராயிருப்பார்கள். இந்த வகுப்பாருக்கு தங்களது குணலட்சணத்தை நிரூபிக்கவும் சோதிக்கவும் சோதனைகள் தேவை என்பதை வேதாகமம் நமக்கு விளக்குகிறது.

நீதியின் கொள்கைகளுக்கு நாம் எந்த அளவுக்கு உண்மையாய் இருக்கிறோம் என்பதை பார்க்க தேவன் விரும்புகிறார். எந்த அளவுக்கு நாம் துன்பத்தை அனுபவிக்க தயாராய் இருக்கிறோம்? “ஒவ்வொரு மனிதனும் அவனது விலையை பெற்றிருக்கிறான்” என்கிற ஒரு உலக பழமொழி உண்டு. ஆகையால் சபையில் சிலர் ஓரளவுக்கு சகிப்பார்கள். அதன்பின் பின்வாங்குவார்கள். மற்றவர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாகவும், இன்னும் மற்றவர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாகவும் சகிப்பார்கள். கர்த்தருடனான அவர்களது உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்கள் என்பதை நிரூபிக்க எல்லாவற்றையம் விட்டுவிடுகிறவர்களை அவர் தேடிக் கொண்டிருக்கிறார் என்று கர்த்தர் அறிவிக்கிறார். நீதியின் பிரமாணங்களாகிய அவரது பிரமாணங்களுக்கும் அவருக்கும் முழுமையாக உண்மையாக இருப்பதே இந்த விசுவாசமாகும்.

### உங்களிடையே பற்றி எரிகிற அக்கினி

சபையை சோதிக்கிற உக்கிரமான சோதனைகளும், தேவனுடைய ஜனங்களிடையே பற்றி எரிகிறவைகள் அனைத்தும் சபையிலிருந்து

R5778 : page 298

வரும் என்று பொருள் கொள்ள வேண்டும் என்று அவசியமில்லை. அவர்களிடையே பற்றி எரிகிற சோதனைகள் ஒரு அக்கினியாக அவர்களை பரிசுத்தம் பண்ணுகிற வேலையை செய்கிறது. ஒவ்வொரு தனிப்பட்ட அங்கமும் சகிக்கவேண்டிய ஒரு அனுபவமாக இருக்கிறது. இது ஒரு பொதுவான அனுபவமாக இருக்கும். ஏனெனில் இந்த காரியத்தில் ஒவ்வொருவரும் ஒரு பங்கை பெற வேண்டும். சபையானது முழுவதுமாக ஒரு எதிர்ப்பை பெற்றிருக்கும் என்பதல்ல, ஒவ்வொரு தனிப்பட்ட அங்கமும் தனித்தனியாக உக்கிரமான சோதனையில் வெளிப்படுத்தப்படுவார்கள். ஆகையால் நம்மிடையே பற்றி எரிக்கிற அக்கினி கடைசி வரை எரியும்.

மற்ற ஜனத்தின் அங்கங்களுக்கு வரக்கூடியதைக் காட்டிலும் இது வேறு வகையானதாக இருக்கிறது. இந்த வேறுபாட்டைக் குறித்த விளக்கம் நமது தலைப்பு வசனத்தில் உள்ளது. "அவருடைய பாடுகளுக்கு நாம் பங்காளிகளானதால்" கிறிஸ்துவின் சரீர அங்கம் ஒவ்வொருவரும் சோதிக்கப்பட வேண்டும் என்பதை அறியும் பொழுது, இந்த அக்கினியில் சில நம்மை தொடும்போது நாம் களி கூறலாம். நாம் கூறுகிறதாவது: "நான் கிறிஸ்துவின் பாடுகளில் ஒரு பங்கை நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன். தேவ கிருபையினால் இந்த சோதனைகளில் ஒரு பங்கை நான் பெறுவதில் நான் சந்தோஷப்படுகிறேன். ஏனெனில் எனக்கு அதில் பங்கு இல்லையென்றால், சரீர அங்கங்களில் நானும் ஒருவன் என்பதை எப்படி நான் அறிவேன்?"

## துன்பத்திற்கு பிரதான மூல காரணம்

ஆகையால் இந்த உக்கிரமான சோதனைகள் தேவனால் வருகிறது என்பதை அறிந்து நாம் அனைவரும் சந்தோஷப்படுகிறோம். கர்த்தர் இந்த உக்கிரமான சோதனைகளுக்கு காரணர் என்பதினாலல்ல, அது வழக்கமாக சத்துருவினால் வருகிறது. ஆனால் நாம் நம்மை கர்த்தரின் கைகளில் ஒப்புக் கொடுத்திருக்கிறோம். அவர் நம்மைக் குறித்த அனைத்து காரியங்களையும் அவர் மேற்பார்வையிடுகிறார் என்று நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். ஆகையால் நமக்கு எது வந்தாலும் அது நமது பிதாவின் அனுமதியின் பேரில் நமது நன்மைக்காக வருகிறது என்பதை நாம் நிச்சயிக்கிறோம். ஆகையால் இது தேவனருளால் நமக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தால் அது நன்மையாக இருக்கிறது. நாம் எத்தனை முறை நமக்கு தேவையான உதவிக்காக கிருபாசனத்தண்டைக்கு போகிறோம் என்பது பெரிய காரியம் அல்ல.

கிறிஸ்துவுக்கு (இயேசு + சபை) மகா உயர்த்துதலை, மகா கனம், மகிமை, சாகாமையை தருவதற்கு தேவன் உத்தேசித்திருக்கிறார் என்று நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகையால் இந்த சரீரமானது எப்பொழுது பூரணமடையும் என்பதையும், நமது தலையானவரின் மகிமையில் எப்பொழுது பங்கு பெறுவோம் என்பதையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மகிமை வெளிப்படுத்தப்படும்போது நாம் பெரிய சந்தோஷத்தில் களிகூறுவோம்! இந்த சோதனை நமக்கு பல்வேறு இடத்திலிருந்து வருகிறது. நமது வசனத்தில் சபைக்கான ஒரு சோதனையைப் போல பேசப்படுகிறது. ஆனால் இந்த ஒரு சோதனை பல்வேறு அனுபவங்களை கொண்டதாக இருக்கிறது. இந்த துன்பங்களும் சோதனைகளும் ஒரே சமயத்தில் வந்தால் அது நமக்கு மிகவும் கடுமையானதாக இருக்கும். ஆகையால் கர்த்தர் அந்த அக்கினியிலிருந்து கொஞ்சகாலம் நம்மை விடுவிக்கிறார். "நமது உருவம் இன்னதென்று அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார்." (சங்கீதம் 103:14)

**R5779 : page 298**

## தற்கால வதைகள் மிகவும் மென்மையாக்கப்பட்டிருக்கிறது

பிதாவானவர் சோதனை காலங்களுக்கிடையே கொஞ்ச காலம் இளைப்பாறுதலை ஏற்பாடு செய்திருக்கிறார். ஆகையால் அடுத்த சோதனை வரும்போது, நாம் கொஞ்சம் அதிக பலமுள்ளவர்களாகவும், அதன் மூலம் பலன்பெற அதிகமாக தாயாராயிருப்போம். இந்த சோதனைகளில் சில சத்துருவானவனிடமிருந்து வருகிறது. சபைக்கு வேறு யாரிடமிருந்தும் சோதனைகள் வந்திருக்க முடியாது என்பது வெளிப்படையாக தெரிகிறது. கர்த்தரிடத்தில் வெளிப்படுத்தப்பட்ட பேயைப் போன்ற மனோபாவத்தையும், அவருடைய பாடுகளில் பிரதிபலித்ததையும் நினைத்துப்பாருங்கள். அவருக்கு விரோதமாக வெளிப்படுத்தப்பட்ட இப்படிப்பட்ட தீய நோக்குடைய ஆவியை மனுக்குலம் எந்த ஒரு சாதாரண நிலைமையிலும் பெற்றிருந்திருக்க முடியும் என்று நம்மால் நினைத்துப் பார்க்கவே முடியாது. நாக்குகளை வெட்டுவது, அவர்களது சரீரங்களை சித்திரவதை செய்வது, கசப்பான வார்த்தைகளை பேசுவது போன்ற தீமையான காரியங்களை பரிசுத்தவான்களுக்கு விரோதமாக பிசாசே செய்யக்கூடியவனாக இருந்தான்.

முற்காலத்தைக் காட்டிலும் தற்காலத்தில் கடைசியாக சொல்லப்பட்ட துன்பங்களையே அனுபவித்து வருகிறோம். ஏனெனில் உலகமானது– சாதாரண மனிதன்–இருண்ட காலங்களில் நடைபெற்ற காரியங்களை அனுமதிக்காது. ஆனால் விரோதம், பகை போன்ற தீமையான உணர்வுகள் அங்கே இருக்கின்றன. அப்போஸ்தலர் கூறுவதைப் போல, நாவும் நெருப்புதான். அது அநீதி நிறைந்த உலகம். நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும் இருக்கிறது. (யாக்கோ 3:6) ஆகையால் தற்காலத்தில் நாவும், பேனாவும் தீமையின் ஆயுதங்களாக அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.

தீமைகளை பேசுவதிலும், தீமைகளானவைகளை நம்புவதிலும் அவர்கள் காணாததை பேசுவதிலும் எப்படி உலகமானது விருப்பங்கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் கவனித்திருக்கிறோம். இவை எல்லாம் ஏன் இப்படி நடக்கிறது என்றால் அவர்கள் சத்துருவானவனால் ஆக்கிரமிக்கப்பட்டும், சூழப்பட்டும் இருக்கிறார்கள். ஆனால் கடந்த கால நமது சகோதரர்களைக் காட்டிலும் நாம் நாகரீகமடைந்த நாட்களில் வாழ்கிறோம். இந்த கெட்ட காரியங்களை செய்யக்கூடிய தனிப்பட்ட மனிதர்கள், தேவனுடைய பிள்ளைகளை அவதூறாய் பேசுகிறவர்களும், தூற்றுகிறவர்களும் தீய எண்ணமுள்ள செல்வாக்கிற்கு கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் நாம் அவர்களை பதிலுக்கு தவறாக பேசவும் அவர்களுக்கு எதிராக கெடுதல் செய்யவும் நாம் தூண்டப்படுகிறோம். இப்படிப்பட்ட மனோபாவம் அதாவது தீமையை பேச எழும்போது, நாம் அதை தடுக்க வேண்டியவர் களாயிருக்கிறோம். நமது பழைய சுபாவங்களை இக்காலத்தின் அக்கினியைக் கொண்டு எரிக்க அனுமதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். மேலும் இந்த அக்கினியானது நம்மை சுத்திகரிக்கும் வேலையை செய்கிறது. இதை சரியானபடி பெற்றுக் கொண்டால், அது நம்மை பரலோக ராஜ்யத்தை சந்திக்க தகுதியுள்ளவர்களாக்குகிறது.

## சோதனைக்கான இரண்டாவதான காரணம்

இந்த சோதனைகள் சத்துருவானவனால் மாத்திரமல்ல, மற்றவர்களின் அபூரணத்தினாலும் பலவீனத்தினாலும் வருகின்றன. மேலும் இது சகோதரர்களிடமிருந்து வருகிறது என்பது மிகவும் தாங்கக் கூடாததாக இருக்கிறது. "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவிசுவாசிகளின் மனதை குருடாக்கியிருக்கிறான்" என்பதை நாம் அறிவோம். தேவனுக்கு உண்மையுள்ளவர்கள் என்று தங்களை வெளிப்படுத்திக் கொண்டவர்கள் அல்லது கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொண்டவர்கள் அவர்களில் பிரிஸ்பட்டேரியனாகவோ அல்லது எபிகோபல் சபையினராகவோ அல்லது பேப்டிஸ்ட் அல்லது காங்கிரிகேஷனிலிஸ்ட்டாகவோ, அல்லது வேதமாணவராகவோ இவர்களில் யாராவது துன்பப்படுத்துகிற ஆவியை உடையவர்களாகக் கண்டால், நாம் மிகவும் ஊக்கம் குன்றியவர்களாகி அவர்களுக்கு சரியான இரக்கம் காண்பிப்பதில் குறைந்தவர்களாகவும் இருப்போம்.

தேவனுடைய அனுமதியில்லாமல் நமக்கு எதுவும் நடக்காது என்று நாம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் மெதடிஸ்ட் அல்லது பிரிஸ்பட்டேரியன் அல்லது வேத மாணவரின் மூலமாக சோதனைகளை பெறவில்லை யென்றால், வேறு எங்கிருந்தாவது நாம் சோதனைகளை பெறுவோம். வளர்ச்சி தேவைப்படுகிற நமது குணலட்சணங்கள் பலம் பெறுவதற்கும், நமது கசடுகளை எரிப்பதற்கும் இந்த சோதனை தேவைப்படுகிறது. அவைகளெல்லாம் நமக்கும் "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை" உண்டாக்குவதற்கு கிரியை செய்கிறது என்று அறிந்து, இவைகளை பொறுமையுடன் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இவைகளை விட்டு, தேவனுடைய மகா நோக்கத்தை கண்டுணர வேண்டும். மகிமையின் மகா ஆலயத்துக்கு நம்மை தயார்படுத்துவதற்கு, நம்மை செதுக்கவும் மெருகேற்றவும் தேவன் செய்கிற முறை இது என்று நாம் பிரதிபலிக்கவேண்டும். இதை நாம் நினைக்கும் போது, இந்த உக்கிரமான சோதனைகளின் மூலம் ஒரு ஆசீர்வாதத்தை பெறுவோம் என்று உணர்ந்து இதை சகிப்புத்தன்மையுடனும் பொறுமையுடனும் நோக்க வேண்டும்.

*"முள்ளுள்ள பாதை வழியாக எனது சோர்ந்த*
*கால்களை அவர் நடத்துகிறார்;*
*கண்ணீர் பாதை வழியாக நான் போகிறேன்,*
*ஆனால் அது இன்பமானது*
*எனது தேவன், எனது வழிகாட்டி,*
*என்னுடன் நெருக்கமாக இருக்கிறார் என்பதை அறிவேன்*
*அவர் என்னை வழிநடத்துகிறார்*
*முழு திருப்தியுடன் நடக்கிறேன்."*

இப்படியாக தேவனுடைய பிள்ளைகளாக நாம் மகிமைக்கு செல்ல கற்றுக் கொள்கிறோம். நமக்குள்ளே, நமக்காக அவர் செய்திருக்கிற அனைத்து காரியங்களிலும் நாம் மகிமையடைவோம். இயற்கையிலேயே சிறியதாக இருக்கக் கூடியவைகள் மகா ஆபத்திலும், துன்பத்திலும் மகிமையடைவார்கள். இதிலும் கூட நாம் மகிமையடைவோம். இவைகளில் நாம் களிகூறுவோம். ஆபத்தையும் துன்பத்தையும் நாம் அனுபவிக்கிறதினாலல்ல, இவைகள் நமது குணலட்சணங்களை தேவனுக்கு பிரியமானதாக மாற்ற கிரியை செய்கின்றன என்பதினால் ஆகும். மகா ஆபத்தில் நாம் அதிகமாக பங்கு பெறாதபடி நமக்கு தேவையானதை மட்டும் பெறும்படி கர்த்தர் பார்த்துக் கொள்வார்.

மகா உபத்திரவம் என்பது தீவிரமான துன்பத்தைக் குறிக்கிறது. துன்பத்தையும் அதனால் பெறக்கூடிய தீவிரமான அனுபவங்களையும் குறிக்கிறது. துன்பத்தில் கொஞ்ச காலம் விழுந்து பிறகு அதிலிருந்து விடுபடுவோம் என்று அதன் பொருள் அல்ல. அது மிகவும் கடுமையான மற்றும் தொடர்ச்சியான துன்பத்தைக் குறிக்கிறது. ஏன் இந்த துன்பங்கள் நமக்கு வந்திருக்கிறது என்பதை நாம் சில சமயங்களில் அறிந்து கொள்ள இயலாது. அவை வியாதி, மரணம், அல்லது பொருளாதார கஷ்டம், அறிந்து கொள்ள முடியாத நமது பெருமை மற்றும் சுயநல

**R5779 : page 299**

அன்பு ஆகிய வடிவங்களில் வரலாம்; அல்லது இந்த துன்பங்கள் சேர்ந்து வரலாம். இது எந்த ஒரு வடிவில் வந்தாலும், அது மகா உபத்திரவம் தான். இந்த எல்லா சோதனைகளிலும் கர்த்தர் நமக்கு நன்மையை ஏற்படுத்துவார் என்பதை நாம் உணர வேண்டியவர்களாயிருக்கிறோம்.

உலகமானது ஒரு வகையான துன்புறுத்தல்களைப் பெற்றிருக்கிறது. தொழிலில் உள்ள ஜனங்கள் சில சமயங்களில் ஒருவரையொருவர் துன்புறுத்திக் கொள்வார்கள். சில சமயங்களில் துன்புறுத்துதல் அரசியல் மூலமாக இருக்கிறது. நாம் குற்றம் பண்ணாமல் துன்பப்படுதலில் நாம் களிகூற வேண்டும் என்று கர்த்தர் சபைக்கு சுட்டிக்காட்டுகிறார். "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமல் இருக்கவேண்டும்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (1 பேதுரு 4:14-16) "இருளானது வெளிச்சத்தை வெறுப்பதினாலும்" சத்தியத்தை பழிப்பதினாலும் அவன் இந்த துன்பத்தை பெறுகிறான். இது இயேசுவின் காலத்திலிருந்து இப்படியாக இருந்து வருகிறது.

## துன்புறுத்தப்படுவதிலிருந்து அடைகிற ஆசீர்வாதம்

இப்படிப்பட்ட எந்த அனுபவத்திலும் நாம் ஒத்துப் போகமாட்டோம் என்று நம்மால் கூறமுடியுமா? இல்லை; நாம் எல்லாவற்றையும் கர்த்தரிடம்

வாக்களித்திருக்கிறோம். நமக்கு எல்லாம் நன்மைக்கேதுவாய் நடக்கிறது என்ற தேவனுடைய உறுதியில் நமது விசுவாசத்தை அறிந்து முற்றிலுமாக நாம் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அது எப்படிப்பட்ட துன்பமாக இருந்தாலும், அதை சரியானபடி அப்பியாசப்படுத்தினால் அது நமக்கு பொறுமையை கொண்டு வரும். கர்த்தரின் ஜனங்களில் சிலர் பொறுமையை நன்கு வளர்த்திருப்பதினால், இந்த அனுபவங்களில் அநேகம் தேவைப்படாது. நமக்கு எது தேவையோ, அதை நாம் விரும்ப வேண்டும்.

தங்கள் குணலட்சணங்களை சோதித்தறிந்து, பொறுமையில் குறைவுபட்டிருப்பின் தீர்மானித்த ஒரு சகோதரரின் வாழ்க்கையை கர்த்தரிடம் தனக்கு மீண்டும் ஞாபகப்படுத்துகிறோம். அவர் கர்த்தரிடம் தனக்கு பொறுமையை தரும்படி ஊக்கமாக ஜெபித்தார். அவர் ஜெபித்துக் கொண்டே வந்தார்; எந்த அளவுக்கு ஜெபித்தாரோ அந்த அளவுக்கு அதிக துன்பங்களை, பொறுமைக்கான பெரும் சோதனைகளை அவர் பெற்றதாக நாம் காண்கிறோம். அவருடைய ஜெபத்திற்கு பதிலாக அது அவருக்கு நடந்தது. ஏனெனில் இதுவே பொறுமையை பெறுவதற்கான வழியாக இருக்கிறது. அவர் காரியங்களை சரியாக பார்க்க ஆரம்பித்தபொழுது, அது அவரை உற்சாகப்படுத்தி பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த ஆவியின் கிருபையை தனது குணலட்சணங்களில் அபிவிருத்தி செய்ய தேவையான அனுபவங்களை கொடுத்து தனது ஜெபத்திற்கு கர்த்தர் பதிலளிக்கிறார் என்பதை அவர் கண்டார்.

"உபத்திரவம், பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது." நாம் பொறுமையை முதலாவது பெறுகிறோம் என்றும் பிறகு அனுபவத்தைப் பெறுகிறோம் என்றும், அதன் பிறகு நமது அனைத்து நம்பிக்கைகளையும் பெறுகிறோம் என்றும் இதற்கு பொருளல்ல; எல்லாம் ஒரே சமயத்தில் அபிவிருத்தி அடைகிறது. நாம் தைரியத்தைப் பெற்று, கர்த்தரை சந்தோஷப்படுத்த விரும்புகிறோம். நாம் அவருடைய பிள்ளையாக இருப்பதினால், நாம் வெட்கப்பட்டுப் போவதில்லை. நாம் ஏன் வெட்கப்பட்டு போவதில்லை என்றால், இந்த நம்பிக்கையுடன் தேவனுடைய அன்பை நாம் உணருகிறோம். மேலும், "நான் உபத்திரவத்தை பெற்றதினால், நான் அதிக நம்பிக்கையையும், பொறுமையையும் பெற்றிருக்கிறேன். இந்த உபத்திரவங்களில், ஆவியின் கனிகளில் பலன்களை நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன்" என்று நாம் சொல்லக்கூடும். பரிசுத்த ஆவியின் கனிகளை அபிவிருத்தி செய்கிற அனுபவங்களை பெறாதவர்கள் இராஜ்யத்தில் ஒரு இடத்தை அடையவே முடியாது.

சோதனைகள் மூலமாக மட்டுமே நாம் பொறுமையை பெற முடியும், தேவைகள் மூலமாக மட்டுமே விசுவாசத்தை அபிவிருத்தி செய்ய முடியும். நமது எதிர்கால வேலைக்கு நம்மை தயார்படுத்துவது அவசியமாயிருக்கிறது. வேதனைப்படுகிற சிருஷ்டியின் சோதனைகள், துன்பங்கள் மற்றும் பலவீனங்களின் உணர்வுகளுடன் இந்த அனுபவங்கள் நம்மை தொடும்போதுதான் இவைகளை நாம் பெறமுடியும். இந்த வேதனைப்படுகிற சிருஷ்டிகளுக்கு, நாம் சிங்காசனத்தை அடையும் போது, நாம் ஊழியர்களாகவும், பிரதிநிதிகளாகவும் இருப்போம். நமக்கு தற்கால அனுபவங்களின் பாடம் தீமையை எதிர்ப்பதற்காகவே இருக்கிறது; தீமையுடன் அல்ல, நன்மையுடன் ஆகும். "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு." (ரோமர் 12:21)

---

See more Books & Articles at www.foodfornewcreature.com